## இந்தியாவிலேயே இதுபோன்ற நிலை ஏற்பட்டதும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதும் இதுவே முதல் முறை!

# கொளத்தூர் தேர்தல் முடிவு வாக்குப்பதிவு இயந்திரங்களால் வந்தது என்பதால் வழக்குத் தொடுத்தோம்!

## உயர்நீதிமன்ற தீர்ப்பு குறித்து கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ விளக்க அறிக்கை!

**சென்னை, செப்.5– கொளத்தூரில் தேர்தல் முடிவுகள் வாக்குப்பதிவு எந்திரங்களால் வந்தது என்பதால் வழக்குத் தொடுக்கப்பட்டது என்று உயர்நீதிமன்ற வழக்கு குறித்து கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ விளக்க அறிக்கை வெளியிட்டுள்ளார்.**

இது குறித்து தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவரின் சார்பில் இரண்டு ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அவை விசாரணைக்கு வந்தன. இன்று உயர்நீதிமன்றம் ஒரு ரிட் மனுவை தள்ளுபடி செய்தது.

இந்த தீர்ப்பு குறித்த பல விமர்சனங்களை இணைய தளத்தில் பார்த்தேன். அதற்கான விளக்கமே இந்த அறிக்கை.

இந்த இரண்டு வழக்குகளுமே, கழக சட்டத்துறையின் சார்பில் தலைவரிடம் இதற்கான சாதக பாதகங்களை எடுத்துச் சொல்லி, நீதிமன்றம் என்ன தீர்ப்பு தந்தாலும், தேர்தல் ஆணையமும் மற்றும் வாக்கு பதிவு இயந்திரங்களின் உள்ள குறைப்பாட்டை நாம் அனைவருக்கும் எடுத்துச் சொல்லவும், முறையாக பதிவு செய்யவும் இந்த முன்னெடுப்பை செய்யாமல் விடக்கூடாது என்று வேண்டுகோள் விடுத்ததின் அடிப்படையில், தலைவர் தந்த ஒப்புதலால் தாக்கல் செய்யப்பட்டவை.

WP 34884/2026 தேர்தல் ஆணையத்தின் EVMகளை சரிபார்ப்பதற்கான வழிகாட்டு நடைமுறை SOP உச்ச நீதிமன்ற உத்திரவிற்கு எதிரானதாக உள்ளதால் அதனை நீக்கறவு செய்ய வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்யப்பட்டது. அது தனி நபருக்கான மனு அல்ல. இந்தியா முழுமைக்கும் பொருந்த கூடிய வழக்கு. 2024 வழிகாட்டு நடைமுறை SOP யை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டது. ஆனால் 2025 வழிகாட்டு நடைமுறை SOPவந்துவிட்டதால் அதனை எதிர்த்து மனு செய்யும் உரிமையுடன் அந்த வழக்கு திரும்ப பெறப்பட்டது.

**உச்சநீதிமன்றம் அறிவுறுத்தல்!**

2024-ல் உச்சநீதிமன்றம் EVM கருவிகளில் சந்தேகம் இருந்தால் 2 ஆம் அல்லது 3 ஆம் இடம் பெறும் வேட்பாளர்கள் 5% கருவிகளை தேர்ந்தெடுத்து அதற்கான கட்டணத்தை செலுத்தி EVM கருவிகளின் BURNT MEMORY ஐ சரி பார்க்கலாம் என உத்திரவிட்டது.

திராவிட முன்னேற்ற கழக சட்டதுறையின் சார்பில் நான் கழகத்தலைவரிடம் இந்த நிலையை சொல்லி, கொளத்தூர் தொகுதியில் EVM களை சரி பார்க்க வேண்டும் என வலியுறுத்தினேன். தலைவரும் ஒப்புதல் தந்தார்.

29.07.2026 லிருந்து 05.08.2026 வரை Checking and Verification நடைபெற்றது. 14 தேர்ந்தெடுக்கப்பட்ட கருவிகளில் சோதனையில் 5 கருவிகள் செயல்படவில்லை அல்லது தலைவரின் பெயர் இருந்த வாக்கு செலுத்தும் கருவி(Ballot Unit)ஐ வாக்கு பதிவு இயந்திரத்தால் (Control Unit) அடையாளம் காண இயலவில்லை. ஒரு வாக்கு இயந்திரத்தில் பாதுகாப்பு சீல்கள் புதியவையாக , நிரப்பப்படாமல் இருந்தது.



**தேர்தல் ஆணையம் விளக்கம் தரவில்லை!**

தேர்தல் ஆணையம் இந்த பழுதுகளை குறித்து உச்சநீதிமன்றத்தின் ஆணையின் படி விளக்கங்களை தரவில்லை.

1. 1951மக்கள் பிரதிநிதி சட்டத்தின் படி தேர்தல் முடிவுகளுக்கு பின் 45 நாட்களில் தேர்தல் மனு தாக்கல் செய்ய வேண்டும்.

2. அதுவும் பிரிவு 100ல் கூறப்பட்டுள்ள காரணங்களுக்கு மட்டுமே தேர்தல் மனு தாக்கல் செய்யப்பட வேண்டும்.

3. யுகங்களின் அடிப்படையில் தேர்தல் மனுவை தாக்கல் செய்ய முடியாது.

4. வாக்கு இயந்திரங்களை ஏறக்குறைய 3 மாதஙகளுக்கு பிறகே சரி பார்க்க ,தேர்தல் ஆணையம் , உச்ச நீதிமன்ற உத்தரவை நீர்த்து போகச் செய்யும் வகையில் நடத்தியது.

இந்த நிலையில், தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கை குறித்து உயர் நீதி மன்றத்தில் முறையிட வேண்டும் என கழக சட்டத்துறை, தலைவரிடம் வலியுறுத்தி கேட்டுக் கொண்டது. தலைவர் அவர்கள் முதலில் வேண்டாமென்று நினைத்தார். பின் இது குறித்து விளக்கங்களை கேட்டறிந்து ஒப்புதல் தந்தார்.

**அனைத்து இயந்திரங்களையும் சரிபார்க்க வேண்டும்!**

கொளத்தூர் தொகுதியின் அனைத்து வாக்கு இயந்திரங்களையும் சரி பார்க்க வேண்டும் மற்றும் VVPAT ல் உள்ள வாக்கு சீட்டுகளை சரி பார்க்க வேண்டும். இதனின் முடிவு அனைவருக்கும் தெரிந்ததே. வாக்கு இயந்திரங்களினால் மட்டுமே கொளத்தூரின் தேர்தல் முடிவு மாறியது.

Article 329(b)ன் படி தேர்தல் வழக்கின் மூலமாக மட்டுமே தேர்தலை செல்லாது என்றும் வேறொரு வேட்பாளரை வெற்றி பெற்றதாக அறிவிக்க முடியும். ஆனால் அரசியலமைப்பு சட்டத்தையும், மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தையும், ஏன் EVM இயந்திரங்களை அறிமுகப்படுத்திய போதும் இது போன்ற நிகழ்வுகளை சட்டமியற்றுபவர்கள் எதிர்பார்த்திருக்க வாய்ப்பில்லை.

2024 உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின் படியே வாக்கு பதிவு இயந்திரங்களை சரிபார்க்க உரிமை தரப்பட்டது. வாக்கு பதிவு இயந்திரங்கள் முறையாக இல்லையென்றால் என்னவாகும் என்பதற்கு நீதிமன்றங்களே தீர்ப்பளிக்க வேண்டும்.எனவே ஏற்கனவே நடந்த பரிசோதனையில் 30% சதவிகித இயந்திரங்கள் பழுதானவை என்றால் அனைத்து இயந்திரங்களையும் சோதித்தால் கழக தலைவர் அவர்களே வெற்றி பெறுவார் என்பதில் அய்யமில்லை. சட்டத்தில் இடமில்லை என்கிறது தேர்தல் ஆணையம், இதற்கான சட்டம் உருவாக்கப்படவில்லை அதனை ஆய்ந்து, நீதியை வழங்கிடத்தான் நீதிமன்றம் என்கிறோம் நாம்.

**சட்டப்படி தீர்வை நாடுவதற்கு மனுதாரருக்கு உரிமை உண்டு!**

**தமது தீர்ப்பில் உயர்நீதிமன்றம் இறுதியாக "ஏற்புடைமை (Maintanability) குறித்த மேற்கண்ட முடிவைக் கருதி, சரிபார்ப்பு நடைமுறைக்கு எதிராக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகளின் தகுதி குறித்தோ, 05.08.2026 தேதியிட்ட எதிர்க்கப்பட்ட உத்தரவின் சரியான தன்மை குறித்தோ ஆராய வேண்டிய அவசியம் இல்லை என இந்த நீதிமன்றம் கருதுகிறது; எனவே அது குறித்து எவ்விதக் கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. விதி 49T மீறப்பட்டதாகக் கூறப்படுவது, VVPAT கருவிகளின் செயலிழப்பு, மற்றும் வாக்குச்சாவடி எண்.208இல் வாக்குப் பதிவு அலகு கண்டறியப்படாதது ஆகியவை உள்ளிட்ட தகுதி சார்ந்த அனைத்து வாதங்களும், தேவைப்பட்டால் உரிய மன்றத்தின் முன் எடுத்துரைக்கப்படுவதற்காக அனுமதி தரப்படுகிறது. அதன்படி, ரிட் மனு ஏற்புடையதன்று எனத் தள்ளுபடி செய்யப்படுகிறது; சட்டப்படி தனக்குக் கிடைக்கக்கூடிய தீர்வை நாடுவதற்கு மனுதாரருக்கு உரிமை வழங்கப்படுகிறது" என்று குறிப்பிட்டுள்ளது.**

நீதிக் கட்சி கொண்டு வந்த இட ஒதுக்கீடை உயர் நீதி மன்றமும் உச்ச நீதிமன்றமும் ஒப்புக் கொள்ளவில்லை. தொடர் சட்டப்போராட்டமும், போராட்டங்களுமே, இட ஒதுக்கீட்டை , அரசியல் அமைப்பு திருத்தமாக கொண்டு வந்தன. வாக்கு பதிவு இயந்திரங்களும் அப்படித்தான். நீதிமன்றம், இது எங்கள் எல்லைக்கு உட்பட்டதில்லை என்று சொன்னாலும்கூட வாக்குப்பதிவு இயந்திரங்கள் செயல்படுகள், தேர்தல் முடிவுக்குப்பின் அதனை சோதனை செய்யும் நடைமுறை, அந்த சோதனையில் இயந்திரங்கள் தவறாக இருந்தால் அதற்கான தீர்வு ஆகியவற்றிக்கான விடை கிடைக்க வேண்டும்.

இந்தியாவில் இது போன்ற நிலை ஏற்பட்டதும், வழக்கு தாக்கல் செய்யப்பட்டதும் இதுவே முதல் முறை. சட்டமும், நீதியும் நல்ல விடையினைக் கொடுக்கும் என்ற நம்பிக்கை உண்டு.

ஆங்கில கருத்தொன்றுதான் நினைவுக்கு வருகிறது.

"I MAY BE WRONG, BUT I AM CLEAR"

கொளத்தூரின் தேர்தல் முடிவுகள், வாக்கு பதிவு இயந்திரங்களினால் வந்ததே என்பதே , அந்த தெளிவு.

இவ்வாறு கழக மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## விதி 110இல் இதுவரைக்கும் தேவையானவற்றையே அறிவித்துள்ளீர்கள்!

# முந்தைய அரசு வழக்குப் போட்டார்கள் என்று உள்நோக்கத்தோடு சொல்வதா?

## சட்டப்பேரவையில் கழக கொறடா எ.வ.வேலு அடுக்கடுக்கான கேள்வி!

சென்னை, செப்.5- சட்டப் பேரவையில் விதி 110இல் முதலமைச்சர் வழக்குகள் தள்ளுபடி குறித்த அறிவிப்பை தொடர்ந்து கழக கொறடா எ.வ.வேலு விதி 110இல் இதுவரைக்கும் தேவையானவற்றையே அறிவித்தீர்கள் என்றும் முந்தைய அரசு வழக்கு போட்டார்கள் என்று உள்நோக்கத்தோடு சொல்வதா? என்று சட்டப் பேரவையில் கழக கொறடா எ.வ. வேலு அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினார்.



நாங்கள் அதினுள்ளே செல்வதற்கு விருப்பப்பட வில்லை. ஆனால், ஒன்று, இதுவரைக்கும் ஓர் அரசு நாட்டுமக்களுக்கு தேவையான வற்றை விதி 110-ல் அறிவித்திருக்கிறார்களேதவிர, இந்த வழக்கை தள்ளுபடி செய்வது என்பதை இதுவரைக்கும் அறிவித்து இல்லை. இதற்கு முந்தைய அரசு வழக்குப் போட்டார்கள் என்று ஓர் உள்நோக்கத்தோடு சொல்லிறபொழுது, அது விவாதத்திற்கு உரியதாக இருக்கிறது.

இப்போது நீங்கள் ஆட்சி நடத்துகிறீர்கள். சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கு காவல் துறை மூலமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, அதற்கு உரிய தண்டனை பெற்றுத்தருவது, கைது செய்வது என்பது காலம் காலமாக ஓர் அரசுக்கு இருக்கிறது. ஏனென்றால் சட்டம், ஒழுங்கை பாதுகாப்பது அரசினுடைய கடமைதான். இப்போது SIPCOT-க்கு இடம் எடுப்பதாக இருந்தாலும் சரி, சாலைகளுக்கு இடம் கொடுப்பதாக இருந்தாலும் சரி, பிரச்சினைகள் வருகிறபொழுது அரசு காவல் துறையைப் பயன்படுத்தித்தான் சட்டம், ஒழுங்கை பாதுகாக்கமுடியும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் சட்டம், ஒழுங்கை பாதுகாப்பதற்காக வழக்கு போடப்பட்டுள்ளது என்று சொன்னால், இந்த அரசு அதை தள்ளுபடி செய்யப்போகிறோம் என்று சொல்வதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், இதை விதி 110-ன்கீழ் கொண்டுவந்து ஒழுங்கை அரசு என்று சொல்வதில் தான் உள்நோக்கம் இருக்கிறது. அப்படிச் சொல்லக் கூடாது.

இதுவரைக்கும் இல்லை, அவ்வாறு இல்லாத ஒரு பழக்கத்தை நீங்கள் எப்படி கொண்டு வருகிறீர்கள். முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்துவிட்டு, இந்த வழக்குகள் எல்லாம் போடப்பட்டது, அதை நாங்கள் தள்ளுபடி செய்யப்போகிறோம் என்று சொல்வதில் எங்களுக்கு மாறுபாடு இருக்க முடியும். இப்போது நான் கேட்கிறேன். ஓர் ஆட்சி நடத்துகிற போது இப்போது நீங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள், இனிமேல் காவல் துறையை வைத்து எந்த வழக்கும் போடமாட்டீர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) ஆக எதுவேண்டுமானாலும் செய்வீர்கள். அப்படித்தானே அர்த்தம், இதற்கு வேறு என்ன பொருள் இருக்கிறது. அதில் என்ன PERSONAL இருக்கிறது.

கடந்த கால முதலமைச்சர் அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் ஆசிரியர்களையோ, விவசாயிகளையோ கைது செய்வதற்கு என்ன அவசியம் இருக்கமுடியும்? சட்டம், ஒழுங்கை பாதுகாக்க வேண்டி ஒரு வழக்கு பதிவு செய்ய வேண்டுமேயொழிய, ஓர் அரசுக்கு சட்டம், ஒழுங்கை பாதுகாப்பதற்காகத்தான் ஒரு வழக்கு போட வேண்டிய அவசியம் இருக்கமுடியும். முதலமைச்சர் அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் என்ன இருக்கமுடியும்?

அவ்வாறு இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. ஆக இந்த ஆட்சியில் காவல் துறைமூலம் வழக்கு போட மாட்டீர்கள், இனிமேல் சட்டம், ஒழுங்கை பாதுகாப்பதில் கவலைப்பட மாட்டீர்கள், இனிமேல் எந்த இடத்திலும் இடம் எடுக்கமாட்டீர்கள், SIPCOT-க்கு இடம் எடுக்க மாட்டீர்கள்.

**சமூக நீதித் துறை அமைச்சர் ஒப்புதல்!**

சமூக நீதித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, எங்கள் ஆட்சியில் வழக்குகளைத் தள்ளுபடி செய்தோம் என்பதை அவரேதான் சொல்லியிருக்கிறார், அதுவே ஒரு சாட்சி. இந்த ஆட்சியில் தள்ளுபடி செய்வது தவறு என்பது என்னுடைய ARGUMENT அல்ல, நீங்கள் கவனித்தீர்கள். எப்போதும் விதி 110 என்பது, நீங்கள் கொடுத்ததோடே நான் என்ன சொன்னேன், விதி 110-ல் எப்போதும் முதலமைச்சர், அமைச்சர்கள் அவர்கள் அறிவிப்பதற்கு முழு அதிகாரம் உண்டு, நீங்கள் அனுமதிக்கிறீர்கள். நாட்டுக்கு வேண்டிய, மக்களுக்கு வேண்டிய திட்டங்களை மட்டும்தான் அதில் சிறப்பாக அறிவிப்பார்களேயொழிய, அதில் உள்நோக்கத்தோடு வழக்கு கள் தொடர்பாக ஏதும் சொல்லவில்லை. நான் அதைத்தான் மீண்டும், மீண்டும் சொல்கிறேன். முதலமைச்சர் அவர்கள் நாளைக்கும் வேறொரு .

விதி 110 என்பது விவாதத்திற்குரியது அல்ல, அதையும் நீங்கள்தான் சொல்கிறீர்கள். விவாதத்திற்கு இல்லை என்றால் என்ன அர்த்தம்? அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதைச் சொல்வதுதான் விவாதத்திற்குரிய தாக இல்லாமல் இருக்க முடியும். அதில் முந்தைய அரசு, முந்தைய அரசு என்று ஒரு உள்நோக்கம் இருக்கும்போது விவாதத்திற்கு வருகிறதா, இல்லையா? அதுதான் என்னுடைய கேள்வி. நான் மீண்டும் சொல்கிறேன். . . உங்களிடம் ஆணை யிடுவதற்கு எனக்கு அதிகாரம் இல்லை.

நான் மீண்டும் சொல்கிறேன், விதி 110-ன்கீழ் முதலமைச்சர்கள், அமைச்சர்கள் அறிவிப்பதற்கு முழு அதிகாரம் உண்டு, நீங்கள் அதை அனுமதிக்கிறீர்கள். நல்லதையெல்லாம் சொல்கிறார்கள், பலரும் அதை வரவேற்கிறார்கள்.

ஆனால், என்ன வென்று கேட்டீர்கள் என்றால், விதி 110-ன்கீழ், 'வழக்கு தள்ளுபடி செய்து' என்று சொல்வதில்கூட எனக்கு ஆட்சேபம் இல்லை. முந்தைய அரசு என்று சொல்லும் போது AUTOMATIC-ஆக அது விவாதத்திற்கு வந்துவிடும். நான் இப்பொழுது சொல்கிறேன். விதி-110-ன்கீழ் இல்லாமல், நீங்கள் சொல்வதைப் பற்றி பிரச்சினை இல்லை. இப்பொழுது, நாங்கள் ஆட்சிக்கு வந்தோம் தள்ளுபடி செய்தோம் என்று சமூகநீதி துறை அமைச்சர் அவர்களே சொல்கிறாரா இல்லையா? நாங்கள் ஆட்சிக்கு வந்தோம், பல CASE-களை, கேட்டு கொண்டதன் அடிப்படையில், நாங்களும் தள்ளுபடி செய்திருக்கிறோம். அது வல்ல; இப்பொழுது நாளைக்கு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் CASE-களை தள்ளுபடி செய்கிறேன் என்று சொன்னாலும் அது தவறு அல்ல.

இவ்வாறு கழக கொறடா எ.வ.வேலு பேசினார்.

---

## ஒழுங்கு நடவடிக்கை!

### தலைமைக் கழக அறிவிப்பு!

வேலூர் வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் வி.டி.சிவக்குமார், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600018.
நாள்: 03-09-2026.

துரைமுருகன்
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

---

# திருச்சியில் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. சிலைக்கு மரியாதை!

## முன்னாள் அமைச்சர் கே.என். நேரு தலைமையில் !

திருச்சி, செப்.5- கப்பலோட்டிய தமிழன் அய்யா வ.உ.சிதம்பரனார் அவர்களின் 155வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று (05.09.2026 சனிக் கிழமை) காலை 08.30* மணியளவில் திருச்சி நீதிமன்றம் அருகில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு கழக முதன்மைச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்கட்சித் துணைத் தலைவர் மான கே.என்.நேரு தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட இருக்கிறது.

இந்நிகழ்வில் இந்நாள், முன்னாள் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில,மாவட்ட கழக, மாநகர கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய நகர, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணியை சேர்ந்த நிர்வாகிகள்,கழக மூத்த முன்னோடிகள், செயல் வீரர்கள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு மாநகர செயலாளர் - மேயர் மு. அன்பழகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

# தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தஞ்சாவூர், செப்.5- தஞ்சைமத்திய மாவட்ட தி.மு.க.செயற்குழு கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10 மணி அளவில் நடைபெற உள்ளதாக மாவட்ட கழக செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு : தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க.வின் செயற்குழு கூட்டம் இன்று 05.09.2026 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் தஞ்சை மாவட்ட கழக அலுவலகம்,



கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவைத் தலைவர் சி.இறைவன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஜி.பி.ராஜா, மாலதி நாராயண சாமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அது சமயம் நடைபெறும் கூட்டத்திற்கு முன்னாள் இந்நாள் நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர், மாநில மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் சார்புஅணி அமைப்பாளர்கள் அனை வரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

கூட்டத்தின் பொருள்.

1. கழகத் தலைவர் அறிவிப்பின்படி கழக மறு சீரமைப்பு குழு வழங்கிய பரிந்துரையின் அடிப்படையில் நகரப் பகுதி ஒன்றிய வட்டக் கழக அமைப்புகளை உருவாக்குவது சம்பந்தமாக. 2. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்ட கழக செயலாளர் துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

---

## தலைமைக் கழக பிரதிநிதிகள் கே.ஈ.பிரகாஷ் எம்.பி.- இரா.ராஜீவ்காந்தி முன்னிலை!

# நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு அறிவிப்பு!

நீலகிரி, செப்.5- நீலகிரி மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் 10.9.2026 வியாழக்கிழமை காலை 11 மணி அளவில் மாவட்ட கழக அவை தலைவர் கே.போஜன் அவர்கள் தலைமையில், தலைமை கழக பிரதிநிதிகளான மாநில இளைஞர் அணி துணை செயலாளர் கே.ஈ.பிரகாஷ் MP. மற்றும் கழக கொள்கைபரப்பு இணை செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி, கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், கழக தேர்தல் பணிக் குழு செயலாளர் கா.ராமசந்திரன் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள், நகர ஒன்றியபேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற்ற தலைமை செயற்குழு கூட்ட தீர்மானத் தின்படி, ஒன்றிய - நகர - பேரூர் கழக மறு



சீரமைப்பு குறித்து.

கழக முப்பெரும் விழா மற்றும் கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

# சென்னை உள்ளிட்ட 19 மாவட்டங்களில் மழை!

சென்னை,செப்.5- தமிழ்நாட்டில் சென்னை உள்பட 20 மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் தனது எக்ஸ் தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது: தமிழ்நாட்டில் சென்னை, திருவள்ளூரில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

மேலும், செங்கல்பட்டு, தருமபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், ராணிப்பேட்டை, சிவகங்கை, தேனி, நீலகிரி, தூத்துக்குடி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாக என அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.